**செய்தி வெளியீடு எண்: 075** **நாள்: 30.01.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

அண்ணல் காந்தியடிகள் அவர்களின் நினைவு நாள் ஆண்டுதோறும் அரசின் சார்பில் அனுசரிக்கப்படுகிறது. அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 72வது நினைவு நாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர், சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்குக்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று (30.01.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, அண்ணல் காந்தியடிகள் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அரசு சார்பில் ஜனவரி 30ஆம் நாள் அன்னாரது நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.

அதன்படி, அண்ணல் காந்தியடிகள் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்குக்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று (30.01.2019) மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர். வி.சரோஜா அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள்,

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி ந.நடராஜன் அவர்கள், மாண்புமிகு பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.நிலோபர் கபீல் அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு.க.பாஸ்கரன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி.எஸ்.வளர்மதி அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.ஆர்.விஜயகுமார் அவர்கள், டாக்டர் ஜெ.ஜெயவர்தன் அவர்கள் திரு.டி.ஜி.வெங்கடேஷ் பாபு அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.நடராஜ் அவர்கள், திரு.வி.என்.ரவி அவர்கள், திரு.ப.சத்யா அவர்கள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர், சென்னை, சர்வோதயா சங்கத்தினர் நிகழ்த்திய நூற்பு வேள்வி மற்றும் வழிபாடு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அரசு தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன்,இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.உல.ரவீந்திரன், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**